# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,903—1970 අප්‍රේල් 24 වැනි සිකුරාදා—1970.4.24

14,903 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு எப்பிறல் மாதம் 24 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | 265 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | 266 | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | 267 | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 269 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மானுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 268 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் .. .. | — |


## மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 136

எண். டி.41/ஆர்ஈசிரி/(II)

### தரைப்படை—நிரந்தரப்படை—அதி உத்தமராம் மகாதேசாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நியமனம்

கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர் 1970, பெப்புருவரி மாதம் 20 ஆம் திகதியிலிருந்து தரைப்படை சம்பளத் தலைவரும் பதிவேட்டுப் பொறுப்பு உத்தியோகத்தர் ஆகவும் பதிற் கடமையாற்றக் கடவர் :

மேஜர் பிரான்சிஸ் சோமரத்ன கஸ்தூரிஆரச்சி, சி.எ.ஜி.எஸ்.சி.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

டபிள்யூ. டி. ஜயசிங்க,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1970 ந் ஞு எப்பிறில் மீ 10 ந் உ.

4–747

---

1970 இன் இல. 137

எண். டி/21/ஆர்ஈசிரி/402

### தரைப்படை—நிரந்தரப் படை—அதி உத்தமராம் மகாதேசாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறல்

கீழ்க் குறிப்பிடப்பெற்ற அலுவலர் 1970, எப்பிறில் மாதம் 8 ஆம் திகதியிலிருந்து தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறினுர் :

லெவ்ரினன்ற் (குவாட்டர் மாஸ்ரர்) டொன் அன்ட்றா ஜயமன்ன சி.எ.எஸ்.சி.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

டபிள்யூ. டி. ஜயசிங்க,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1970 ஞு எப்ரில் மீ 12 ந் உ.

4–754

---

1970 இன் இல. 138

எண்.டி/விஎவ்/22/எ(II)

### தரைப்படை—சிவிஎவ்—அதி உத்தமராம் மகாதேசாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவிநிலை உறுதிப்படுத்தல்

1968 ஆம் ஆண்டு எப்ரல் மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் மேஜராகக் கடவர் :

கப்ரின் (தற்காலிக மேஜர்) சந்திரா நிஸ்ஸன்க பாணபொக்கெ, சி.எஸ்.ஆர்.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

டபிள்யூ. டி. ஜயசிங்க,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1970 ந் ஞு எப்பிரல் 11 ந் உ.

4–745

---

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஞு திசெம்பர் மீ 14 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

1970 இன் இல. 139

எண். டி/விஎவ்/10/எ(II)

## தரைப்படை–சிவிஎவ்–அதி உத்தமராம் மகாதேசாதிபதி யவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்ச்சி

1970 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் மேஜராகக் கடவர் :

கப்ரின் வீரசிங்க ஜெராட் அன்ரன் சில்வா, சி.எ.எம்.சி.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

டபிள்யூ. டி. ஜயசிங்க,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1970 ந் ஆண்டு ஏப்பிரல் மீ 11 ந் உ.

4–746

1970 இன் இல. 140

எண். டி/விஎவ்/10/எ(II)

## தரைப்படை–சிவிஎவ்–அதி உத்தமராம் மகாதேசாதிபதி யவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறல்

தரைப்படையின் தொண்டர் படையிலிருந்து கப்ரின் (குவாட்டர் மாஸ்டர்) எரிக் தியடோசியஸ் த அல்விஸ், சிஎஎம்சி, 1970 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் இளைப்பாறிவிட்டார்.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

டபிள்யூ. டி. ஜயசிங்க,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு

கொழும்பு, 1970 ஆண்டு ஏப்பிரல் மீ 13 ந் உ.

4–753

1970 இன். இல. 141

எண்.டி.251/ஆர்ஈசிரி/3.

## இலங்கை அரச கடற்படை–அதி உத்தமராம் மகாதேசாதிபதி யவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற பதவி ஏற்றம்

1970, மார்ச்சு மாதம் 1 ஆம் திகதியிலிருந்து லெவ்ரினன்ற்–கொமாண்டர் ஆகக் கடவர் :

லெவ்ரினன்ற் ஈ. பி. டி. கெஸ்பேர்ஸ், இலங். அ. க.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

டபிள்யூ. டி. ஜயசிங்க,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு 1, 1970 ந் ஆண்டு ஏப்பிறில் மீ 11 ந் உ.

4–743

1970 இன் இல. 142

எண். டி.252/ஆர்ஈசிரி/4

## இலங்கை அரச ஆகாயப்படை–அதி உத்தமராம் மகாதேசாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு

1970, மார்ச்சு 1 ஆம் திகதியிலிருந்து தற்காலிக “ விங் கொமாண்டர் ” ஆகக் கடவர் :

ஸ்குவாட்றன் லீடர் மனம்பெரி கோரலாகே டொன் சில்வஸ்ரர் சந்திபால (01038) உபகரணம்

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

டபிள்யூ. டி. ஜயசிங்க,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, ஆண்டு ஏப்பிரல் மீ 10 ந் உ.

4–744

# நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 143

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம் | புதிய நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. வி. என். எ. டபிள்யு. விக்ரமசூரிய | பதில் நீதவான் முதலியன, இரத்தினபுரி .. | 1970 ஏப்ரல் 7 லிருந்து 15 வரை | திரு. எல். எஸ். பெரேரா இல்லாத காலங்கள் |
| திரு. ஈ. எ. விஜகுலசூரிய | நீதிச்சேவையில் உத்தியோகத்தர் ஒருவராக. தகுதிகாண்நிலை மூன்று வருடங்கள் | 1970 ஏப்பிரல் 1 லிருந்து .. | மறு அறிவித்தல் வரை |
| திரு. ஈ. எ. விஜகுலசூரிய | நுவரேலியா பதில் மாவட்ட நீதிபதி, அற்றன் முதலிய இடங்கள் | 1970 ஏப்ரல் 8 லிருந்து 22 வரை | திரு. எம். சண்முகலிங்கம் இல்லாத காலங்கள் |
| திரு. எம். பி. விஜயசிங்க .. | பதில் மாவட்ட நீதிபதி முதலியன, அவிசாவளை | 1970 மார்ச் 9 லிருந்து 25 வரை | திரு. கே. டி. ஒ. எஸ். எம். செனிவிரட்ண இல்லாத காலங்கள் |
| திரு. எம். எ. எம். உசேன் .. | பாணந்துறை மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1970 ஏப்ரல் 3 லிருந்து .. | பாணந்துறை மாவட்ட நீதிமன்ற 7594 இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ஜே. சேனாதிராஜா .. | பதுளை மேலதிக நீதவான் முதலியன, அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1970 மே 3 லிருந்து .. | பதுளை நீதிமன்ற 31597, 31598, 31599, 31600 இலக்க வழக்குகளில் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. பி. வி. பொட்டேஜு .. | கொழும்பு மேலதிக நீதவான் முதலியன, ஹோமகமவில் | 1970 ஏப்ரல் 5 லிருந்து 9 வரை | திரு. சி. அமெரசிங்க இல்லாத காலங்கள் |
| திரு. என். ஜே. வி. கூரே .. | மேலதிக நீதவான் முதலியன, கொழும்பு .. | 1970 ஏப்ரல் 9 லிருந்து 12 வரை | திரு. என். பி. டி. எஸ். விஜயசேகர இல்லாத காலங்கள் |
| திரு. சி. ஈ. பெரைரா .. | மேலதிக நீதவான் முதலியன, கொழும்பு .. | 1970 ஏப்ரல் 16, 17, 18 .. | திரு. என். பி. டி. எஸ். விஜயசேகர இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். சுரவீர .. | மேலதிக நீதவான் முதலியன, கேகாலை .. | 1970 ஏப்ரல் 5 .. | திரு. வி. என். எ. டபிள்யு. விக்ரமசூரிய இல்லாத காலம் |
| திரு. பி. பின்ரோ .. | மேலதிக நீதவான் முதலியன, சிலாபம்–புத்தளம் | 1970 ஏப்ரல் 12 லிருந்து 16 வரை | திரு. எஸ். பி. குணவர்த்தன இல்லாத காலங்கள் |
| திரு. ஜே. எஸ். ருஜபக்ச .. | மேலதிக நீதவான் முதலியன, சிலாபம்–புத்தளம் | 1970 ஏப்ரல் 5 லிருந்து 11 வரை | திரு. எஸ். பி. குணவர்த்தன இல்லாத காலங்கள் |
| திரு. டபிள்யு. ஈ. பெரேரா | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, கம்பக | 1970 ஏப்ரல் 26 லிருந்து 30 வரை | திரு. எம். ஜமீல் இல்லாத காலங்கள் |
| திரு. டி. சேரசிங்க .. | மேலதிக மாவட்ட நீதவான் முதலியன, தங்காலை | 1970 மார்ச் 27 .. | திரு. ஜி. சி. டபிள்யு. டி சில்வா இல்லாத காலம் |

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம் | புதிய நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. எல். டபிள்யு. பெர்னுன்டோ | கண்டி மேலதிக மாவட்ட நீதிபதி, கம்பளை முதலிய இடங்களில் | 1970 ஏப்ரல் 5 லிருந்து 11 வரை | திரு. எல். ஏ. குணவர்த்தன இல்லாத காலங்கள் |
| திரு. எச். ஈ. எஸ். விக்ரமரட்ண | மேலதிக விண்ணப்ப நீதிமன்ற ஆணையாளர் முதலியன, கொழும்பு | 1970 மார்ச் 28 .. | திரு. ஜி. எவ். எச். அதுறுப்பான இல்லாத காலம் |
| திரு. சி. தியாகருஜா .. | கண்டி மேலதிக மாவட்ட நீதிபதி, மாத்தளை முதலிய இடங்களில் | 1970 மார்ச் 26 லிருந்து 31 வரை | திரு. ஈ. ஏ. விஜகுலசூரிய இல்லாத காலங்களில் |
| திரு. எவ். ஆர். வீரசேகர .. | மேலதிக நீதவான் முதலியன, இரத்தினபுரி | 1970 ஏப்ரல் 5, 6 .. | திரு. எல். எஸ். பெரெரா இல்லாத காலங்கள் |
| திரு. ஜே. ஈ. இலங்கன் திலக்க | பாதடும்பர முதலியனவற்றின் ஊர்நீதிமன்ற மேலதிகத் தலைவர் | 1970 மார்ச் 31 லிருந்து .. | வலள்ள ஊர்நீதிமன்ற 6182 இலக்க குற்றவியல் வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ஜி. சூரியஆராச்சி .. | குளியப்பிட்டி காரியாதிகாரப் பிரிவு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 மார்ச் 9 லிருந்து 11 வரை | திரு. கே. கடவத்தை ஆரச்சி இல்லாத காலங்கள் |
| திரு. கே. ஏ. அரசக்கோன்.. | ஏருவூர் கோறளை முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 ஏப்ரல் 1 லிருந்து 5 வரை | திரு. எச். அமீன் இல்லாத காலங்கள் |
| திரு. பி. எம். எஸ். எக்கனுயக்க | மொறவக் கோறளை முதலியவற்றின் ஊர்நீதிமன்ற மேலதிகத் தலைவர் | 1970 மார்ச் 23 லிருந்து .. | தம்பகல்ல ஊர்நீதிமன்ற 1385 இலக்க குடியியல் வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. என். டீ. ஜே. செனிவிரட்ண .. | தெகிகம்பளை கோறளை முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 மார்ச் 20 .. | திரு. எஸ். தர்மதாச இல்லாத காலம் |
| திரு. கே. கணபதிப்பிள்ளை.. | தென்மராட்சி முதலியவற்றின் ஊர்நீதிமன்ற மேலதிக தலைவர் | 1970 ஏப்ரல் 4 லிருந்து .. | சம்பியன்பற்று ஊர்நீதிமன்ற 465 இலக்க குற்றவியல் வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. பி. வி. சேனுதிருஜா | வவுனியாத் தெற்கு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 மார்ச் 26 ம், 31 ம் .. | திரு. கே. சின்னத்தம்பி இல்லாத காலங்கள் |

சிறிமெவன் அமெரசிங்க,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. 573,
கொழும்பு 12,
1970 ம் ஆண்டு ஏப்ரல் மீ 9 ந் வ.

4—656

---

## மற்றைய நியமனங்களும் பிறவும்

**1970 இன் இல. 144**

பி 4/எஸ்வி 18/19, பி 4/எஸ்வி 18/21, பி 4/எஸ்வி 14/76,
பி 4/எஸ்வி 6/29, பி 4/எஸ்வி 28/131, பி 4/எஸ்வி 28/57,
பி 4/எஸ்வி 28/118, பி 4/எஸ்வி 14/113, பி 4/எஸ்வி 3/102,
பி 4/எஸ்வி 20/141, பி 4/எஸ்வி 2/89, பி 4/எஸ்வி 16/62.

### நீதிமன்றங்கள் கட்டளைச்சட்டம்

**82 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

(6 ஆம் அத்தியாயமான) நீதிமன்றங்கள் கட்டளைச்சட்டத்தின் 82 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதி அமைச்சர், அலெக்சாந்தர் பெயர்லி விஜேமான்ன ஆகிய யான்,

1. வனசிங்க முதியன்சேலாகே கல்யாணபால அபேகுணவர்தன அவர்களைத் தங்காலை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானெருவராகவும்,
2. டொன் சால்ஸ் விக்ரமசேகர ராஜபக்ச அவர்களைத் தங்காலை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானெருவராகவும்,
3. மொரம்பிட்டிய கேவாகே கென்றி ஆரியரத்ன அவர்களைக் காலி நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானெருவராகவும்,
4. டொன் திதசபேம விஜேசிங்க அவர்களை அவிசாவலை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானெருவராகவும்,
5. சிங்கநாதகே சிசிருவன் ஜயநாக அவர்களைக் குருநாகலை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானெருவராகவும்,
6. ஜயசுந்தர முதியன்செலாகே புஞ்சிபண்டா அவர்களைக் குருநாகலை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானெருவராகவும்,
7. கேரத் முதியன்செலாகே கேரத்பண்டா கேரத் அவர்களைக் குருநாகலை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானெருவராகவும்,
8. லொகுவடுகே மாசல் அவர்களைக் காலி நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான் நீதிவானெருவராகவும்,
9. போககவத்தகே பியதாச வைத்தியதிலக அவர்களைக் கழுத்துறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானெருவராகவும்,
10. கந்தவனம் வயிரமுத்து சுப்பிரமணியம் அவர்களைப் பருத்தித்துறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானெருவராகவும்,
11. சுலைமான் லெப்பே மொகமட் அவர்களைக் கம்பகா நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானெருவராகவும்,
12. முகாந்திரம் பீற்றர் ஜயவீர அவர்களை மாத்தறை நீதுநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானெருவராகவும்.

இத்தால் நியமிக்கின்றேன்.

ஏ. எவ். விஜேயமான்ன,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1970 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 17 ந் வ.

4—802

---

இல. ஈபி/ஏ 258/2

கீழ்வரும் நியமனத்தைச் செய்வதில் உள்நாட்டு அலுவல்களின் மாண்புமிகு அமைச்சர் மகிழ்ச்சி அடைகின்றார் :—

பதுளை நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான பதில் அரசாங்க அதிபர் ஏ. மாதென அவர்கள், தனது சொந்தக் கடமைகளுடன் 1970 மார்ச்சு மாதம் 16 ம் தேதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை பதுளை நிருவாக மாவட்டத்திற்கு பெற்றோலிய கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ளூர் அதிகாரி.

அ. ஏ. கோகளி மொறகொட,
நிரந்தரச் செயலாளர்.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
ரொரிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7.
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 31 ந் வ.

4—662

### 1970 இன் இல. 145

இல. ஈபி/எ. 204/3

1950 யூலை மாதம் 14 ம் தேதிய 10,123 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட பொருள்கோடற் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 2) 10 ஆ என்னும் விதியின் கீழ் தனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளர் பின்வரும் நியமனங்களைச் செய்திருக்கிறார் என்பதைப் பொதுமக்களின் கவனத்திற்கு அறியத்தரப்படுகின்றது :—

பதுளை நிருவாக மாவட்டத்தின் அதிகார பூர்வமான பதில் அரசாங்க அதிபர் எ. மாதென அவர்கள், தனது சொந்தக் கடமைகளுடன் ஊவா மாகாணப் பிசுக்காலாகவும், பதுளை நிருவாக மாவட்டத்தின் சுங்கச் சேர்ப்பாளராகவும் பதுளைச் சிறைக்கூட அதிகாரியகவும், 1970 மார்ச்சு மாதம் 16 ம் தேதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை கடமை புரிய.

இரத்தினபுரி நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான அரசாங்க அதிபரின் அலுவலக உதவியாளராகிய கே. டீ. பீ. த சில்வா அவர்கள் தனது சொந்தக் கடமைகளுடன் இரத்தினபுரி நிருவாக மாவட்டத்தின் பிரதி பிசுக்காலாகவும் 1970 மார்ச்சு மாதம் 1 ம் தேதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை கடமைபுரிய.

அ. எ. கோகஸி மொறகொட,
நிரந்தரச் செயலாளர்.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
றொரிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7.
1970 ம் ௵ மார்ச்சு ௴ 31 ந் உ.

4–661

---

### 1970 இன் இல. 146

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

சிவசங்கரன் பாலேந்திரன் அவர்கள் பருத்தித்துறை சாவகச்சேரி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

4–615

---

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1949 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஈட்டுச் சட்டத்தின் கீழ் கடன் முகவர் நிலையங்கள் முதலியவற்றின் அங்கீகாரத்திற்கான சபை அங்கத்தவர்கள்

1966 ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் 12 ஆந் திகதி, இலங்கை அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி இல. 14,721/3 யில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் சார்பாக, வர்த்தக வியாபார அமைச்சர், 1949 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஈட்டுச் சட்டம் பிரிவு 114 (1) யின் கீழ் தமக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு, அச்சட்டத்தின் தேவைக்கென அமைக்கப்பட்ட சபையில், திரு. எஸ். ஆர். டி. சில்வாவை 1970, ஜனவரி 15 ஆந் திகதி தொடக்கம் மேலும் மூன்று வருட காலத்திற்கு அங்கத்தவராயிருக்கும் வண்ணம் நியமித்துள்ளார்.

பி. எ. சில்வா,
நிரந்தரக் காரியதரிசி,
வர்த்தக வியாபார அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ௵ மார்ச் ௴ 25 ந் உ.

4–617

---

### சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்

சவுளி உற்பத்தித் தொழிற் சம்பளச் சபையில் வேலைக்கமர்த்துபவர்களின் பிரதிநிதியாயிருந்த திரு. ஈ. எஸ். டீ சில்வா என்பவர் தாமாக விலகியமையால், அவருக்குப் பதிலாக உறுப்பினராயிருத்தற்கு திரு. என். யூ. ஜயவர்தன என்பவரை (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 9 ம் பிரிவிற்கமைய கனம் தொழில், தொழில் வசதி அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென, 1943 ம் ஆண்டின் சம்பளச் சபை ஒழுங்கு விதிகளின் 26 ம் ஒழுங்கு விதியின்படி இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஜீ. பீ. தம்பையா,
நிரந்தரச் செயலாளர்,
தொழில், தொழில் வசதி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ௵ ஏப்ரில் ௴ 10 ந் உ.

4–636

---

இல. 543இ/141டி (பகுதி VII)

உபகாரச் சம்பளப் பிரமாணக் குறிப்புக்களின் 11 ஆம் பிரிவின் பிரகாரமும் சொல்லப்பட்ட பிரமாணக் குறிப்புக்களின் ஏற்பாடுகளுக்கமையவும் இதனகத்துள்ள பட்டோலையின் I ஆம் பத்தியில் தரப்பட்டுள்ள பதவிகள் ஒவ்வொன்றையும், அப்பட்டோலையின் II ஆம் பத்தியில் நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள திணைக்களத்தில் வகிக்கும் ஒவ்வொருவரும், அத்தகைய பதவிக்கு அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து உபகாரச் சம்பளத்திற்குத் தகவுடையவராவாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எம். இராசேந்திரா,
திறைசேரிச் செயலாளர்.

பொதுத் திறைசேரி,
கொழும்பு,
1970 ம் ௵ ஏப்பிரல் ௴ 5 ந் உ.

#### பட்டோலை

| பத்தி I | பத்தி II |
|---|---|
| போதனாசிரியர், I ஆந் தரம் (ஆங்கிலம்) இலங்கைத்தொழில்னுட்பவியல் கல்லூரி 1967.9.1 ஆந் தேதி முதல் திரு. ஜே. வி. எம். குணவர்த்தன அவர்கள் வகிக்கும் மட்டும்) பணிப்பாளர், பாடசாலை வேலைகள் | கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு |
| செயலாளர் .. | .. சட்ட ஆணைக்குழு |
| சுகாதார, தோட்ட வேலையாட்கள் | .. காட்டுத் திணைக்களம் |
| ஒளிப்படப் படியெடுகருவி இயக்குநர் | .. நில அளவைத் திணைக்களம் |
| நேரம் குறிப்போர் .. | .. உணவுத் திணைக்களம் |
| மின் முகாரி, III ஆந் தரம் | .. காணி அபிவிருத்தித் திணைக்களம் |

4–622

---

### பதிவாளர்களின் நடவடிக்கைகளைச் செல்லுபடியானவை ஆக்குவதற்கான கட்டளைச் சட்டம்

(121 ம் அத்தியாயமான) பதிவாளர்களின் நடவடிக்கைகளைச் செல்லுபடியானவையாக்குவதற்கான கட்டளைச் சட்டத்தின் 3 ம் பிரிவின் கீழ் உள்நாட்டலுவல்களமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

டபிள்யூ. தகநாயக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ௵ மார்ச்சு ௴ 11 ந் உ.

#### கட்டளை

இதற்குள்ள அட்டவணையின் 1 ம் நிரலிற் காட்டப்பட்டுள்ள விவாகத்தின் பதிவானது, அவ்வட்டவணையின் 11 ம் நிரலிற் காட்டப்பட்டுள்ள பலமற்றதாக்கும் காரணம் பதிவு செய்த காலத்தில் இருந்திராதது போலச் சகல நோக்கங்களுக்கும் அதே வலிமையும் பயனுமுடையதாகக் கருதப்படல் வேண்டும்.

#### அட்டவணை

| 1 ம் நிரல் | 11 ம் நிரல் |
|---|---|
| வதுளை மாவட்டத்தின் யட்டிக்கிந்த பிரிவின் பதில் விவாக பதிவாளராக எம். ஆர். எம். சுமனவதி குமாரி ஹாமி என்பவரால் செய்யப்பட்ட 1969 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ந் திகதிய 2925 இலக்க விவாகப் பதிவு | இவ்விவாகத்தை நிறைவேற்றும் சமயத்தில் முறையாக நியமிக்கப்பட்ட பதில் பதிவாளர் எம். ஆர். எம். சுமனவதி குமாரி ஹாமி சமுகம் கொடுக்காமலிருக்க, வேறொரு நபர் அதாவது முறையாக நியமனம் பெறாத ஓர் பதிவாளர் இவ்விவாகத்தை 35 ம் பிரிவின் கீழ் நிறைவேற்றியது |

4–691

## 1954 ம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச் சட்டம்

### 49 ம் பிரிவின் கீழான சான்றிதழ்

1954 ம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச் சட்டத்தின் 49 ம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின்படி, விஞ்ஞான ஆராய்ச்சி வீடமைப்பு அமைச்சர் மஹாபாலகே தொன் ஹென்றி ஜயவர்த்தன ஆகிய நான், மேற்கூறப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 2 ம் பிரிவின் அடிப்படையில் வீடமைக்கும் நோக்கமாக இத்துடன் இணைக்கப் பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி அரசாங்கத்தினால் சுவீகரிக்கப் பட வேண்டும் என இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

எம். டீ. எச் ஜயவர்த்தன,
விஞ்ஞான ஆராய்ச்சி வீடமைப்பு அமைச்சர்.

என ஏ/740/கே/20.
கொழும்பு,
1970 ம் ஆடு மார்ச்சு மீ 21 ந வ.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பிலியந்தலை பெ. இ. உ. பிரிவிலும், மொறட்டுவ நகரசபை எல்லைகளுக்குள்ளேயும், மொறட்டு வெல்லவில் அமைந்துள்ள, பிரதான வீதியில் 213 ம் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்டுள்ள கிட்டத்தட்ட 18·25 பேர்ச்சஸ்கள் விஸ்தீரண முள்ள பாயுருககாவத்தை என்று அழைக்கப்படும் காணியின் கூறுகள் அ, ஆ, இ எனக்குறிப்பிடப்பட்ட எல்லாம் பிரிக்கப்பட்ட பகுதிகள் 3779 அ ஆம் இலக்க அளவை வரைப்படத்திற் காட்டப்பட்டன. அதன் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : நடைப்பாதை ;
கிழக்கு : நடைப்பாதை ;
தெற்கு : காட் வீதியும், திரு. ஈ. எம். பெர்ணண்டோ அவர் களுக்கு உரித்தான காணியும் ;
மேற்கு : மேலே சொல்லப்பட்ட படத்தின், ஈ, உ, ஊ கூறுகள்

4–657

---

## நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

குருநாகலை நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் நொத் தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள ஜயரத்ன லங்காதிலக அவர்கள், மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் சிங்கள பாஷையிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

4–668

---

## நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் நொத் தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள எடரியன் ஏரெட்னி மெதிவ் அவர்கள் மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் சிங்கள பாஷையிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

4–667

---

## நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் நொத் தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள செல்வி கலுதன் திரகே உதித இந்ராணி ஜயவீர பண்டார மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் சிங்கள பாஷையிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் அனுமதி யளிக்கப்பட்டுள்ளது.

4–666

---

## நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

நீர்கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள மல்நய்தலா கே ஜோன் சரச்சந்ர குணரத்ன அவர்கள் மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் சிங்கள பாஷையிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் அனுமதி யளிக்கப்பட்டுள்ளது.

4–669

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### பிரகடனம்

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கோறளைப்பற்று, ஏறாவூர் பட்டின சபை எல்லை தவிர்ந்த ஏறாவூர்ப்பற்று ஆகிய பகுதிகளில் விசர் நாய் அபாயம் இருப்பதால், இம்மாவட்ட பதில் அரசாங்க அதிபராகிய தேவ நேசன் நேசையா ஆகிய நான், விசர் நாய்ச் சட்டத்தின் (இலங்கை சட்டநிரூபண சட்டத்தின் 476 ம் அத்தியாயம்—தொகுப்பு 12) 11 ம் பிரிவின், (1) ம் உட்பிரிவின் பிரகாரம், விசர் நாய் அபாயம் இருக்கும் பகுதிகளாக இவற்றைப் பிரகடனப்படுத்துகின்றேன்.

மேற்கூறிய பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளிலுள்ள, சொந்தக் கட்டி டங்களிலோ, வளவுகளிலோ, தோட்டங்களிலோ தவிர்ந்த வேறு பொது இடங்களிலோ, அல்லது தெருக்களிலோ, கட்டப்படாமல் அல்லது வழி நடத்திக் கொண்டு செல்லாமல் இருக்கும் எந்த ஒரு நாயும், விசர் நாய்ச் சட்டத்தின் 11 (2) ம் பிரிவின்கீழ் (இலங்கை சட்டநிரூபண சட்டத்தின் 476 ம் அத்தியாயம் தொகுப்பு 12) அழிக்கப்பட ஏதுவாகும்.

தே. நேசையா,
மட்டக்களப்பு மாவட்ட பதில் அரசாங்க அதிபர்.

மட்டக்களப்பு கச்சேரி,
1970 ம் ஆடு மார்ச் மீ 28 ந வ.

4–708

---

## (1968 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க நீர்ப்பாய்ச்சற் (திருத்த) செய்சட்டத்தினால் திருத்தப்பட்டபடியான நீர்ப்பாய்ச்சற் கட்டளைச் சட்டம் அதிகாரம் 453)

கமநலச்சேவை ஆணையாளர் செனவிரத்ன பண்டார சேனநாயக ஆகிய நான் 1968 ஆம் ஆண்டின் நீர்ப்பாய்ச்சல் (திருத்த) 48 ஆம் இலக்கச் செய்சட்டத்தினால் திருத்தப்பட்டபடியான நீர்ப்பாய்ச்சற் கட்டளைச் சட்டம் அதிகாரம் 453 இன் (இலங்கைச் சட்ட வாக்கங்கள்) படி கண்டி அரசாங்க அதிபரால் 1968 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க நீர்ப்பாய்ச்சற் (திருத்தம்) செய்சட்டத்தின் 17 ஆம் பிரிவினால் திருத்தப்பட்ட படியான மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப் பட்டதும் கீழ்க்குறிக்கப்பட்டிருப்பதுமான திட்டம் என்னால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

எஸ். பி. சேனநாயக,
கமநலச்சேவை ஆணையாளர்.

1970 ம் ஆடு மார்ச்சு மீ 18 ந வ.

### சிறிய நீர்ப்பாய்ச்சல் வேலைகளைத் திருத்துவதற்கான திட்டம்

1. வேலையின் பெயரும் விவரணமும் : தேவாலேவெவ ஐ/25 (1·35 × 0.35).

2. இத்திட்டத்தின் கீழ் நீர்ப்பாய்ச்சக் கூடிய காணியின் தன்மையும் அளவும்—தனியாருக்குச் சொந்தமான காணி : 51 அண்ணளவான ஏக்கர் அளவு : முடிக்குரிய காணி :— அண்ணளவான ஏக்கர் அளவு :

3. ஒப்புக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் :—

(1) கீழேதரப்பட்ட மிகமுக்கியமான கட்டட வேலைகளை அதாவது

(1) 30 அடி உயரமும் மேல்மட்டம் 6 அடி அகலமுமுள்ள குளக்கட்டுக் கட்டுதல்.

(2) சுலிசுடன் கூடிய வான் கட்டுதல்.

மதிப்பிடப்பட்ட செலவாகிய ரூபா 48,000 வரைக்கும் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(2) மேற்சொன்னவாறு அரசாங்கம் பொறுப்பேற்றமைக்குக் கைம்மாறு காணித்துண்டு பெற்றவரும் குடிநில உரிமை யுள்ள விவசாயிகளும் அல்லது எக்காணியிலும் காணி பெற்றவரோ குடிநில உரிமையுள்ள விவசாயிகளோ இல்லாத விடத்து அக்காணிகளின் சொந்தக்காரர்கள், இக்கட்டட வேலை கள் முடிந்ததன் பின் எதுவித வேதனமுமின்றி இவற்றைப் பேணுவதற்கும் திருத்துவதற்குமான கூலியாளர்களைக் கொடுத்துதவ வேண்டும்.

(3) இத்திட்டத்தின் கீழ் தங்கள் பங்கைச் செலுத்துவதில் காணித்துண்டு பெற்றவரோ குடிநில உரிமையுள்ள விவசாயி யோ, இவர்களில்லாத விடத்துக் காணியின் சொந்தக்காரரோ தவறுவாராயின் இப்படியான வேலையை வேறு ஒருவரைச் செய்ய அரசாங்க அதிபர் பணித்து இதனால் ஏற்படும் செலவினை இக்கட்டளைச் சட்டத்தின் vii ஆம் பாகத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அறவிடலாம்.

4–637

## மக்கள் வங்கி, 221, யூனியன் பிளேஸ், கொழும்பு 2
## 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டம்

### 73 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மக்கள் வங்கியின் இயக்குநர் சபைத் தலைவரான தியடோர் பிறேபுறூக் பானபொக்க ஆகிய நான், 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைக் கொண்டு, இத்துடனுள்ள அட்டவணையிற் தரப்படும் உரிமையாக்கற் கட்டளையின் மூலம் மக்கள் வங்கியால் உரிமையாக்கப்பெற்ற இடங்கள் எதனிலேனும் எவருக்காவது உரிமையிருப்பின் சொல்லப்பட்ட 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் கீழ், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நட்டஈட்டுத் தொகை முழுவதற்கு அல்லது ஏதேனும் பகுதிக்குரிய உரிமைகளைக் கொழும்பு 2 இல் யூனியன் பிளேஸ், 167½ இலக்கத்திலுள்ள மக்கள் வங்கியின் காணி மீளற் பகுதியிலிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய படிவங்களில் 1970 ஆம் ஆண்டு ஏப்றில் மாதம் 24 ஆந் திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள் விண்ணப்பிக்கும்படி இத்தால் அறிவிக்கின்றேன்.

உரிமை விண்ணப்பங்கள் இதற்காகவுள்ள படிவங்களில், முப்பிரதிகளில், எழுதப்பட்டு மக்கள் வங்கி இயக்குநர் சபைத் தலைவர், 221, யூனியன் பிளேஸ் கொழும்பு 2 என்ற விலாசத்துக்கு அனுப்பப்படல் வேண்டும்.

ரி. பீ. பானபொக்க,
தலைவர்,
மக்கள் வங்கி இயக்குநர் சபை.

கொழும்பு,
1970 ம் ௵ ஏப்றில் மீ 7 ந உ.

### அட்டவணை

1. 1970 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம் 14,894/3 கொண்ட இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையிற் பிரசுரிக்கப்பட்ட உரிமையாக்கற் கட்டளை இல. 19.

4–681

---

### அறிவித்தல்

இத்தால் சகலருக்கும் அறியத்தருவது யாதெனில் 1970 ம் ஆண்டு மே மாதம் 1 ந் திகதி தொடக்கம் கேகாலை மாவட்டத்தில் உள்ள றுவங்வெல்ல சுற்றுப் பயண பங்களா விடுதிச்சாலையாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளதென்று இத்தால் அறிவிக்கின்றேன்.

எஸ். மாரலந்த,
கேகாலை மாவட்ட அரசாங்க அதிபர்.

கேகாலைக் கச்சேரி,
1970 ம் ௵ மார்ச்சு மீ 25 ந உ.

4–635

---

## கம்பனிகள் கட்டளைச் சட்டம்

### (145 ம் அத்தியாயம்)

### 277 (3) ம் பிரிவின்கீழ் பெயர் நீக்கத்திற்கான அறிவித்தல்

### றுவரிஸ்ட் இன்ஸ் லிமிரட்

கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின (145 ம் அத்தியாயம்) ஏற்பாடுகளின் கீழ் 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 11 ம் திகதியில் கூட்டப்பெற்ற றுவரிஸ்ட் இன்ஸ் லிமிரட் என்னும் கம்பனி வியாபாரம் செய்யவில்லை எனவும், செயற்படவில்லை எனவும் நம்புவதற்கு நியாயமான காரணம் இருந்தலால் இதற்கு மாறுபாடான காரணம் காட்டாதவிடத்து, கம்பனிகள் பதிவாளராகிய ஜெயரத்தினம் பீலிக்ஸ் பொன்னம்பலம் ஆகிய நான், கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் (145 ம் அத்தியாயம்) 277 (3) ம் பிரிவின்படி செயலேற்று, இத்திகதியிலிருந்து மூன்று மாத இறுதியில் றுவரிஸ்ட் இன்ஸ் லிமிரட் இன் பெயர் இத்திணைக்களத்தில் இருக்கும் கம்பனிகளின் பதிவேட்டிலிருந்து நீக்கப்பெற்று, குறித்த கம்பனி குலைக்கப்படுமென இத்தால் அறிவித்தல் தருகிறேன்.

ஜெ. பீ. பொன்னம்பலம்
கம்பனிகள் பதிவாளர்.

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
கொழும்பு 1,
1970 ம் ௵ ஏப்றில் மீ 8 ந உ.

4–663

## கூட்டுறவுச் சங்கங்களைக் கலைத்தல்

### நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல்

கூட்டுறவுச் சங்கங்களின் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 124) கூட்டுறவுச் சங்கங்களின் கட்டளைச் சட்டத்தின் 52 (2) வது பிரிவின் பிரகாரம் கீழே தரப்படும் சங்கங்களை நேரே குறிக்கப்படும் திகதிகளில் கலைப்பதற்கான அறிவித்தல் இத்தால் தரப்படுகிறது :—

| | சங்கத்தின் பெயர் | கலைக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 1. | மட்டுப்படுத்தப்பட்ட தம்பிலிகொட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் | 1.2.70 |
| 2. | மட்டுப்படுத்தப்படாத தொறவாக்க உடவாகே கூட்டுறவு கடனுதவு சங்கம் | 1.2.70 |
| 3. | மட்டுப்படுத்தப்பட்ட கிட்டாவ வராதிவெல கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கம் | 1.2.70 |
| 4. | மட்டுப்படுத்தப்பட்ட மாகுற பலாத்த கூட்டுறவு விவசாய உற்பத்தியும் விற்பனவுச் சங்கம் | 1.2.70 |
| 5. | மட்டுப்படுத்தப்பட்ட மாமதல கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கம் | 1.2.70 |
| 6. | மட்டுப்படுத்தப்பட்ட துனிஸ்கல்ல இிரிந்தியெல தோட்டம் ஊழியர் கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கம் | 7.2.70 |
| 7. | மட்டுப்படுத்தப்பட்ட கலயாய பலாத்த் கல்யாணி இள விவசாயிகள் கூட்டுறவு விவசாயச் சங்கம் | 7.2.70 |
| 8. | மட்டுப்படுத்தப்பட்ட கந்ததுல்ல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் | 7.2.70 |
| 9. | மட்டுப்படுத்தப்பட்ட உடட்டாவ கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கம் | 7.2.70 |
| 10. | மட்டுப்படுத்தப்பட்ட போதுப்பிட்டிய தெற்கு கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கம் | 7.2.70 |
| 11. | மட்டுப்படுத்தப்பட்ட புதுகாப்புவ கூட்டுறவு விவசாய உற்பத்தியும் விற்பனவுச் சங்கம் | 19.2.70 |
| 12. | மட்டுப்படுத்தப்பட்ட பட்டுகொட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் | 19.2.70 |
| 13. | மட்டுப்படுத்தப்பட்ட தம்பனே தேயிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் | 19.2.70 |
| 14. | மட்டுப்படுத்தப்பட்ட மாக்கந்துற சிற்றூர்மன்ற அநுவலக ஊழியர் கூட்டுறவு சிக்கனமும் சேமிப்புச் சங்கம் | 19.2.70 |
| 15. | மட்டுப்படுத்தப்பட்ட கறதான தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் | 19.2.70 |
| 16. | மட்டுப்படுத்தப்பட்ட பெரியகுஞ்சிக்குளம் கூட்டுறவு கோழிப்பண்ணை சங்கம் | 20.2.70 |
| 17. | மட்டுப்படுத்தப்பட்ட கந்தர தெற்கு கூட்டுறவு பண்டசாலைச் சங்கம் | 22.2.70 |
| 18. | மட்டுப்படுத்தப்பட்ட அம்பால கூட்டுறவு பண்டசாலைச் சங்கம் | 22.2.70 |
| 19. | மட்டுப்படுத்தப்பட்ட கொலுகல கூட்டுறவு பண்டசாலைச் சங்கம் | 22.2.70 |
| 20. | மட்டுப்படுத்தப்பட்ட வேவல கூட்டுறவுத் தொழிற் சங்கம் | 22.2.70 |
| 21. | மட்டுப்படுத்தப்பட்ட கோளாவில் ஸ்ரீ கணேச கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கம் | 22.2.70 |
| 22. | மட்டுப்படுத்தப்பட்ட சியாம்பலாகொட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் | 23.2.70 |
| 23. | மட்டுப்படுத்தப்பட்ட தெகிகஸ்பே சியாம்பலாகொட கூட்டுறவு விவசாய உற்பத்தியும் விற்பனவும் சங்கம் | 24.2.70 |

ஆர். பி. ராஜகுரு,
பிரதி கூட்டுறவு ஆக்க ஆணையாளரும்,
பிரதி கூட்டுறவுச் சங்கப் பதிவாளரும்.

கூட்டுறவுத் திணைக்களம்,
த. பெ. இல. 419,
கொழும்பு 1,
1970 ம் ௵ ஏப்பிரல் மீ 10 ந உ.

4–638

## மாத்தறை மாவடத்திலுள்ள மொறவக்கோறளீ மேற்கு பிரிவுக் காரியாதிகாரி பிரிவிலுள்ள கிராமசேவையாளர் பிரிவைப் புனரமைப்புச் செய்தல்

1970 ம் ஆண்டு மே மாதம் 1 ம் திகதியிலிருந்து மாத்தறை பரிபாலன மாவட்டத்திலுள்ள மொறவக்கோறளீ மேற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவிலுள்ள 241 இலக்கத்தைக்கொண்ட பல்லேகம கிராமசேவையாளர் பிரிவு பல்மேகம எனவும் கிரிவல்தொல எனவும் இரண்டு கிராமசேவையாளர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதென இத்தால் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

(அ) பின்வரும் திட்டங்கள்/கிராமங்கள் 241 இலக்கத்தைக்கொண்ட பல்லேகம கிராமசேவையாளர் பிரிவில் அடங்கும்.

(1) பல்லேகம

(2) பதவல

(ஆ) பின்வரும் கிராமங்கள் 241 எ இலக்கத்தைக்கொண்ட கிரிவல்தொல கிராமசேவையாளர் பிரிவில் அடங்கும்.

(1) கிரிவல்தொல
(2) பற்றேயாய
(3) கந்நில்பான
(4) கிரிவலகம
(5) தெகிகம்பல
(6) தல்கந்த

2. இப்புதிய கிராமசேவையாளர் பிரிவுக்கு நீதி நடப்புச்செய்யும் நீதிமன்றமும், கிராமக்கோடும், பொலீஸ் நிலயமும், இப்பிரிவில் சேரும் பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவுப் பிரிவும், தேர்தல் மாவட்டமும், உள்ளூராட்சிப் பிரிவும், பொது அறிவித்தலுக்காகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| கிராம சேவையாளர் பிரிவு | நீதிமன்றம் | கிராமக்கோடு | பொலீஸ் நிலயம் | பிறப்பு இறப்பு விவாக பதிவு பகுதி | உள்ளூராட்சி நிறுவனம் | தேர்தல் மாவட்டம் |
|---|---|---|---|---|---|---|
| 1. பல்லேகம .. | 1. மாத்தறை .. 2. தெனியாய பிரயாணக்கோடு | தெனியாய .. | வறல்ல .. | பல்லெகம .. | தெனியாய கிராமச சங்கம் | 66. தெனியாய |
| 2. கிரவல்தொல .. | 1. மாத்தறை .. 2. தெனியாய பிரயாணக்கோடு | தெனியாய .. | வறல்ல .. | உடுவகவும் பல்லே கமவும் | தெனியாய கிராமச்சங்கம் | 66. தெனியாய |

மாத்தறைக் கச்சேரி,
1970 ம் ஆண்டு மார்ச் மீ 14 ந உ.

எம். எல். ஜே. விக்ரமரத்ன,
மாத்தறை மாவட்ட அரசாங்க அதிபர்.

618/1

---

## மாத்தறை மாவட்டத்திலுள்ள மொறவக்கோறளீ மேற்கு பிரிவுக் காரியாதிகாரி பிரிவிலுள்ள கிராமசேவையாளர் பிரிவைப் புனரமைப்புச் செய்தல்

1970 ம் ஆண்டு மே மாதம் 1 ம் திகதியிலிருந்து மாத்தறை பரிபாலன மாவட்டத்திலுள்ள மொறவக்கோறளீ மேற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவிலுள்ள 240 ம் இலக்கத்தைக்கொண்ட மேதறபிட்டிய கிராமசேவையாளர் பிரிவு மேதறப்பிட்டியவும் கொலவேனிகமவும் என இரண்டு கிராமசேவையாளர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதென இத்தால் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

(அ) பின்வரும் திட்டங்கள்/கிராமங்கள் 240 இலக்கத்தைக்கொண்ட மேதறப்பிட்டிய கிராமசேவையாளர் பிரிவில் அடங்கும்.

(1) மேதறப்பிட்டிய
(2) தொம்பகொட
(3) லந்தகம
(4) பொத்தன
(5) வத்துகலகம

(ஆ) பின்வரும் கிராமங்கள் 240எ இலக்கத்தைக்கொண்ட கொலவேனிகம கிராமசேவையாளர் பிரிவில் அடங்கும்.

(1) வறகொட
(2) அகலபிற்றிகம
(3) கொலவேனிகம

2. இப்புதிய கிராமசேவையாளர் பிரிவுக்கு நீதி நடப்புச்செய்யும் நீதிமன்றமும், கிராமக்கோடும், பொலிஸ் நிலயமும், இப்பிரிவில், சேரும் பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவுப் பிரிவும், தேர்தல் மாவட்டமும், உள்ளூராட்சிப் பிரிவும், பொது அறிவித்தலுக்காகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| கிராமசேவையாளர் பிரிவு | நீதிமன்றம் | கிராமக்கோடு | பொலிஸ் நிலயம் | பிறப்பு இறப்பு விவாகப்பதிவு பகுதி | உள்ளூராட்சி நிறுவனம் | தேர்தல் மாவட்டம் |
|---|---|---|---|---|---|---|
| 1. மோதறப்பிட்டிய | 1. மாத்தறை .. 2. தெனியாய பிரயாணக்கோடு | தெனியாய .. | வறல்ல .. | பல்லேகம .. | தெனியாய கிராமச்சங்கம் | 66. தெனியாய |
| 2. கொலவேனிகம | 1. மாத்தறை .. 2. தெனியாய பிரயாணக்கோடு | தெனியாய .. | வறல்ல .. | பல்லேகம .. | தெனியாய கிராமச் சங்கம் | 66. தெனியாய |

மாத்தறைக் கச்சேரி,
1970 ம் ஆண்டு மார்ச் மீ 14 ந உ.

எம். எல். ஜே. விக்ரமரத்ன,
மாத்தறை மாவட்ட அரசாங்க அதிபர்.

4-618/2

## மாத்தறை மாவட்டத்திலுள்ள மொறவக்கோறளை கிழக்கு பிரிவுக் காரியாதிகாரி பிரிவிலுள்ள கிராமசேவையாளர் பிரிவைப் புனரமைப்புச் செய்தல்

1970 ம் ஆண்டு மே மாதம் 1 ம் திகதியிலிருந்து மாத்தறை பரிபாலன மாவட்டத்திலுள்ள மொறவக்கோறளை கிழக்கு பெரும்பாக இறைவர் உத்தியோகத்தர் பிரிவிலுள்ள 246 ம் இலக்கத்தைக்கொண்ட இன்னலிய கிராமசேவையாளர் பிரிவு இன்னலிய எனவும் கற்றவில எனவும் இரண்டு கிராமசேவையாளர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதென இத்தால் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

(அ) பின்வரும் திட்டங்கள்/கிராமங்கள் 246 இலக்கத்தைக்கொண்ட இன்னலிய கிராமசேவையாளர் பிரிவில் அடங்கும்.
(1) இன்னலிய

(ஆ) பின்வரும் கிராமங்கள் 246எ இலக்கத்தைக்கொண்ட கற்றவில கிராமசேவையாளர் பிரிவில் அடங்கும்.
(1) கற்றவில (2) பட்டிகல

2. இப்புதிய கிராமசேவையாளர் பிரிவுக்கு நீதி நடப்புச்செய்யும் நீதிமன்றமும், கிராமக்கோடும், பொலீஸ் நிலையமும், இப்பிரிவில் சேரும் பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவுப் பிரிவும், தேர்தல் மாவட்டமும், உள்ளூராட்சிப் பிரிவும், பொது அறிவித்தலுக்காகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| கிராமசேவையாளர் பிரிவு | நீதிமன்றம் | கிராமக்கோடு | பொலீஸ் நிலையம் | பிறப்பு இறப்பு விவாகப்பதிவு பகுதி | உள்ளூராட்சி நிறுவனம் | தேர்தல் மாவட்டம் |
|---|---|---|---|---|---|---|
| 1. இன்னலிய .. | 1. மாத்தறை .. 2. தெனியாய பிரயாணக்கோடு | தம்பகல .. | வறள்ள .. | பெரலபனுதர .. | பெரலபனுதரகிராமச்சங்கம் | 66. தெனியாய |
| 2. கற்றவில .. | 1. மாத்தறை .. 2. தெனியாய பிரயாணக்கோடு | தம்பகல .. | வறள்ள .. | பெரலபனுதர .. | பெரலபனுதரகிராமச்சங்கம் | 66. தெனியாய |

மாத்தறைக் கச்சேரி,
1970 ம் ஆண்டு மார்ச் மீ 14 ந் உ.

எம். எல். ஜே. விக்ரமரத்ன,
மாத்தறை மாவட்ட அரசாங்க அதிபர்.

4-618/3

## காலி மாவட்டத்தில் பெந்தோட்டை வலல்லாவிட்டிக் கோறளை பிரிவுக் காரியாதிகாரியின் பகுதியில் கிராம சேவகர் பிரிவு/பிரிவுகளைத் திருத்தியமைத்தல்

1970 வருடம் மே மாதம் 1 ஆந் திகதியிலிருந்து காலி பரிபாலன மாவட்டத்தில் பெந்தோட்டை வலல்லாவிட்டிக்கோறளை பிரிவுக் காரியாதிகாரியின் பகுதியில், 20 ஆம் இலக்க பிருக்மணவத்துகொட கிராம, கிராம சேவகரின் பிரிவை பிருக்மணவத்துகொட, பாத்தகங்கொட என இரு கிராம சேவகர்களின் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளதென்பதைப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

(அ) கீழே குறிப்பிட்டுள்ள குடியேற்றம்/கிராமம் 20 ஆம் இலக்க பிருக்மணவத்துகொட கிராம சேவகரின் பிரிவினுள் அடங்கும்.

1. பிருக்மணவத்துகொட

(ஆ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிராமங்கள் 20எ ஆம் இலக்க பாத்தங் கொட கிராம சேவகரின் பிரிவினுள் அடங்கும்.

1. பாத்தகங்கொட 2. கொடகெதற
3. நுறுகல 3. வெலிவத்துகொட
5. வருகொட 6. பன்னல
7. கினிகல்கொட

2. இக் கிராம சேவகர்களின் பிரிவுகளுக்குரிய நீதிமன்றம், கிராமக் கோடு, பொலிஸ் பிரிவு, பிறபு இறப்பு, விவாகப் பதிவுகாரரின் பிரிவு, ஸ்தல ஸ்தாபன சபைகள், வாக்காளர் தொகுதி ஆகியனவற்றை யாவரும் அறிந்துகொள்ளும் வண்ணம் கீழ் காட்டப்பட்டுள்ளன.

(1) கிராம சேவகரின் பிரிவு 1. 20 பிருக்மணவத்துகொட
2. 20எ பாத்தகங்கொட.
(2) நீதிமன்றம்—பலப்பிட்டிய.
(3) கிராமக் கோடு—அம்பலாங்கொட.
(4) பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகாரரின் பிரிவு—வெலித்தற.
(5) ஸ்தல ஸ்தாபன சபைகள்—பலப்பிட்டிய பட்டினசபை, கொஸ்கொட கிராமசபை.
(6) வாக்காளர் தொகுதி—இல. 55 பலப்பிட்டிய.
(7) பொலிஸ் நிலையம்—அம்பலாங்கொட.

காலி கச்சேரி,
1970 ம் ஆண்டு மார்ச் மீ 28 ந் உ.

பி. ஏ. ரி. குணசிங்க,
அரசாங்க அதிபர்,
காலி மாவட்டம்.

4-639/1

## காலி மாவட்டத்தில் நாலு கடவத்தை பிரிவுக் காரியாதிகாரியின் பகுதியில் கிராம சேகவர் பிரிவு/பிரிவுகளைத் திருத்தியமைத்தல்

1970 ம் வருடம் மே மாதம் 1 ஆந் திகதியிலிருந்து காலி பரிபாலன மாவட்டத்தில் நாலு கடவத்தை பிரிவுக் காரியாதிகாரியின் பகுதியில் 98 ஆம் இலக்க மடவலமுல்ல கிராம, கிராம சேவகரின் பிரிவை மடவலமுல்ல வடக்கு, மடவலமுல்ல தெற்கு என இரு கிராம சேகவர்களின் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதென்பதைப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் இத்தால் அறிவிகப்படுகின்றது.

(அ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள குடியேற்றம்/கிராமம் 98 ஆம் இலக்க மடவலமுல்ல வடக்கு கிராம சேவகரின் பிரிவினுள் அடங்கும்

1. தல்கஹ ஹேன 2. பட்டகன்வில
3. கஹதுவ வத்த 4. நிதங்கொடெல்ல
5. வில பகல

(ஆ) கீழே குறிப்பிட்டுள்ள கிராமங்கள் 98எ ஆம் இலக்க மடவலமுல்ல தெற்கு கிராம சேவகரின் பிரிவினுள் அடங்கும்.

1. மினுவங்கொட 2. அளபளாவ
3. மடபாத்தல (ஒரு பகுதி)

2. இக் கிராம சேவகர்களின் பிரிவுகளுக்குரிய நீதிமன்றம், கிராமக் கோடு, பொலிஸ் பிரிவு, பிறப்பு இறப்பு, விவாகப் பதிவுகாரரின் பிரிவு, ஸ்தல ஸ்தாபன சபைகள், வாக்காளர் தொகுதி ஆகியனவற்றை யாவரும் அறிந்துகொள்ளும் வண்ணம் கீழ் காட்டப்பட்டுள்ளன.

(1) கிராம சேவகரின் பிரிவு 1. 98 மடவலமுல்ல வடக்கு
2. 98எ மடவலமுல்ல தெற்கு
(2) நீதிமன்றம்—காலி.
(3) கிராமக் கோடு—இல்லை.
(4) பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகாரின் பிரிவு—காலி.
(5) ஸ்தல ஸ்தாபன சபைகள்—காலி மாநகர சபை.
(6) வாக்களார் தொகுதி—இல. 62 காலி.
(7) பொலிஸ் நிலையம்—காலி.

காலி கச்சேரி,
1970 ம் ஆண்டு மார்ச் மீ 28 ந் உ.

பி. ஏ. ரி. குணசிங்க.
அரசாங்க அதிபர்,
காலி மாவட்டம்.

4-639/2

## காலி மாவட்டத்தில் நாலு கடவத்தை பிரிவுக் காரியாதிகாரியின் பகுதியில் கிராம சேவகர் பிரிவு/ பிரிவுகளைத் திருத்தியமைத்தல்

1970 ம் வருடம் மே மாதம் 1 ஆந் திகதியிலிருந்து பரிபாலன மாவட்டத்தில் நாலு கடவத்தை பிரிவுக் காரியாதிகாரியின் பகுதியில் 97 ஆம் இலக்க தங்கெதற கிராம, கிராம சேவகரின் பிரிவை தங்கெத வடக்கு, தங்கெதற தெற்கு என இரு கிராம சேவகர்களின் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளதென்பதைப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

(அ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள குடியேற்றம்/கிராமம் 97 ஆம் இலக்க தங்கெதற வடக்கு கிராம சேவகரின் பிரிவினுள் அடங்கும்.

1. தங்கெதற துவே 2. தங்கெதற
3. மடபாத்தல (ஒருபகுதி)
4. மஸ்ஸல வத்த.

(ஆ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிராமங்கள் 97எ ஆம் இலக்க தங்கெதற தெற்கு கிரம சேவைகரின் பிரிவினுள் அடங்கும்.

1. வெலிவத்த 2. வளவ்வ வத்த
3. தொன் சைமன் மேஸ்திரிகொட
4. ஒருப்புவத்த

2. இக் கிராம சேகவர்களின் பிரிவுகளுக்குரிய நீதிமன்றம், கிராமக் கோடு, பொலிஸ் பிரிவு, பிறப்பு இறப்பு, விவாகப் பதிவுகாரரின் பிரிவு, ஸ்தல ஸ்தாபன சபைகள், வாக்காளர் தொகுதி ஆதியனவற்றை யாவரும் அறிந்துகொள்ளும் வண்ணம் கீழ் காட்டப்பட்டுள்ளன.

(1) கிராம சேவகரின் பிரிவு 1. 97 தங்கெதற வடக்கு
2. 97எ தங்கெதற தெற்கு
(2) நீதிமன்றம்—காலி.
(3) கிராமக் கோடு—இல்லை.
(4) பிறப்பு, இறபு, விவாப் பதிவுகாரரின் பிரிவு—காலி.
(5) ஸ்தல ஸ்தாபன சபைள்—காலி மாநகர சபை.
(6) வாக்காளர் தொகுதி—இல. 62 காலி.
(7) பொலிஸ் நிலையம்—காலி.

பி. எ. ரி. குணசிங்க,
அரசாங்க அதிபர்,
காலி மாவட்டம்.

காலி கச்சேரி,
1970 ம் ஆண்டு மார்ச் 28 ந உ.

4-639/3

---

## விசர்நாய்க் கெடுதி

பதுளை மாவட்டத்தில் இப்பொழுது நாய்களினால் கெடுதி ஏற்படுவதையிட்டு விசர்நாய்க் கெடுதி சட்ட சமைப்பு விதிகளின் 476வது அத்தியாயத் தின் 11 வது பிரிவின் கீழ் 1970 ஏப்பிரல் மாதம் 1 ந திகதி தொடக்கம் ஆறுமாதகாலத்திற்கு இம்மாவட்டத்திலுள்ள பதுளை மாநகர சபை, பண்டாரவளை, ஹப்புத்தளை நகர சபை, வெலிமடை, லுணுகலை, பசறை, ஹாலி-எல பட்டின சபை ஆகியவற்றிற்குரிய எல்லைகளைத் தவிர்ந்த ஏனைய பகுதிகள் விசர்நாய்க்கெடுதிக்குட்பட்ட பிரதேசங்களாக அமுலிலி ருக்குமென இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

2. ஆகையினால் பதுளை மாவட்டத்தின் மேற்குறிப்பிடப்பட்ட வெளியீட் டுக்கமைந்த பிரதேசங்களில் கட்டப்படாமலும் பிரத்தியேக வீடு, வளவு, காணிகள் தவிர்ந்த பகிரங்க இடங்களில் ஒருவரால் நடத்திக்கொண்டு செல்லப்படாமலும் தெருவிலோவேறு இடங்களிலோ காணப்படும் எந்த நாயையும் உடனடியாகக் கொல்லுவதற்கு முடியுமென இதனால் அறிவிக்க கப்படுகிறது.

3. 1970.3.26 ந திகதி வெளியிடப்பட்ட 14,899 இலக்கத்தைக்கொண்ட வர்த்தமானி அறிவித்தல் இத்தால் நீக்கப்படுகிறது.

ஆ. மாதென,
பதுளை மாவட்ட அரசாங்க அதிபர்.

பதுளை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயம்.
1970 ம் ஆண்டு ஏப்ரல் மீ 8 ந உ.

4-665

---

## கேகாலை மாவட்டத்தின் பெலிகல் கோறளையின் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவின் கிராம சேவையாளர் பிரிவு புனரமைப்புச் செய்தல்

1970 மே மாதம் 1 ம் தேதி முதல் கேகாலை மாவட்டத்தின் பெலிகல் கோறளை பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின பிரிவின் 68 ம் இலக்க இம்புல்கல கிராம சேவையாளர் பிரிவை இம்புல்கல இல. 68, தம்முனபொல இல. 68எ என்னும் இரண்டு கிராம சேவையாளர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

(அ) பின்வரும் கிராமங்கள் 68 ம் இலக்க இம்புல்கல கிராம சேவை யாளரின் பிரிவில் அடங்கும்.

(1) இம்புல்கல
(2) கலன்ஹுயக்க
(3) ரெனபன
(4) வல்கொப்பேவல
(5) அட்றுகொடபாலகம

(ஆ) பினவரும் கிராமங்கள் 68 எ இலக்க தம்முனபொல கிராம சேவையாளரின் பிரிவில் அடங்கும்.

(1) அம்முனபொல
(2) அட்றுகொட கிலகம
(3) வந்துராதெனிய
(4) கொலிந்த குரூப் (பகுதி)

2. இக்கிராம சேவையாளர் பிரிவுகள் அடங்கும் நீதிமன்றம், கிராம நீதிமன்றம், பொலிசு நிலயம், பிறப்பு இறப்பு விவாகப்பிரிவு, உள்ளூராட்சி மன்றம், தேர்தற் தொகுதி ஆகியன பொது மக்களின் கவனத்திற்கு அறியத்தரப்படுகின்றது.

(அ) நீதிமன்றம் ; கேகாலை நீதிமன்றம்
(ஆ) கிராம நீதிமன்றம் ; தெதிகம.
(இ) பொலிசு நிலயம் : கேகாலை.
(ஈ) பிறப்பு இறப்புப் பதியும் பிரிவு : கத்துபிற்றபத்து (வடக்கு).
(உ) விவாகப் பதியும் பிரிவு : பெலிகல் கோறளை.
(ஊ) உள்ளூராட்சி மன்றம் : கலிகமுவ கிராமச் சபை.
(எ) தேர்தற்தொகுதி : கலிகமுவ—131.

எஸ். மாரலந்த,
கேகாலை மாவட்டத்தின் அரசாங்க அதிபர்.

கேகாலை கச்சேரி,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 13 ந உ.

4-620

---

## கண்டி மாவட்டத்தின் பாததும்பர பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவில் உள்ள கிராமசேவையாளர் பகுதியை திரும்ப இணைத்து கூட்டுதல்

கண்டி மாவட்ட நிருவாகப்பிரிவில் உள்ள பாதத்தும்பர பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவில் உள்ள இலக்கம் 176 உரிகடுவ கிராம சேவையாளர் பிரிவை இரண்டு கிராம சேவையாளர் பிரிவுகளாக 1970ம் ஆண்டு மே மாதம் 1ம் திகதி தொடக்கம் பிரிக்கப்பட்டுள்ளன என்பது இத்தால் அறியத்தரப்படுகிறது.

(1) பெயர் :— இலக்கம்—176 உரிகடுவ வடக்கு (2) இலக்கம்—176 எ— உரிகடுவ தெற்கு

(அ) இலக்கம் 176 கொண்ட உரிகடுவ வடக்கு கிராமசேவையாளர் பிரிவு பின்வரும் கிராமங்களை உள்ளடக்கி இருக்கும் (1) கெதாவெல (2) இத்தமலியாகொட (3) உரிகடுவ கம்மெத்த, (4) பிடவெல

(ஆ) இலக்கம். 176 எ உரிகடுவ தெற்கு கிராமசேவையாளர் பிரிவு பின்வரும் கிராமங்களை உள்ளடக்கி இருக்கும் (1) உரிகடுவ (2) நிடுல் தென்ன (3) தொடன்

(2) இப்புதிய கிராமசேவையாளர் பகுதிகளின் ஆட்சி எல்லைப்படி இவற்றுக்குரிய குற்ற நடுவர்மன்றம், கிராமக்கோடு, நகர்காவலர் நிலை பிறப்பு இறப்பு, விவாகப் பதிவாளர் பகுதி, தேர்தல் தொகுதி உள்ளூர் ஆட்சி மன்றம்பொது அறிவித்தலின் பொருட்டு கீழ்தரப்படுகின்றது :—

| | | |
|---|---|---|
| கிராம சேவையாளர் பகுதி .. | 176 உரிகடுவ வடக்கு .. | 176 ஏ உரிகடுவதெற்கு |
| நகர்காவலர் நிலையம் .. | வத்தேகம .. | வத்தேகம |
| குற்ற நடுவர் மற்றம் .. | தெல்தெனிய .. | தெல்தெனிய |
| கிராமக்கோடு .. | வலல .. | வலல |
| பிறப்பு, இறப்பு. விவாகப்பதிவாளர் .. | பாததும்பர உடுகம்பாக தெற்கு .. | பாததும்பர உடுகம்பாக மேற்கு |
| உள்ளூர் ஆட்சி மன்றம் .. | பாததும்பர உடுகம்பாக வடக்கு .. | பாததும்பர உடுகம்பாக தெற்கு |
| தேர்தல் தொகுதி .. | கம்பஹா வடக்கு குண்டசாலை .. | கம்பஹா வடக்கு குண்டசாலை |

டபிள்யு. ஜே. பெர்னாண்டோ
அரசாங்க அதிபர் கண்டி மாவட்டம்.

கச்சேரி, கண்டி,
1970 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 20 திகதி.

4—619

---

## கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ள நீர்கொழும்பு காரியாதிகாரியின் பிரிவிலுள்ள அளுத்குறு கோறளே வடக்கு " அ " கிராம சேவகர் பகுதியைப் பிரித்தல்

1970 ம் வருடம் மே மாதம் 1 ம் தேதி முதல் கொழும்புப் பரிபாலனப் பகுதியில் அமைந்துள்ள நீர்கொழும்பு காரியாதிகாரியின் பிரிவில் உ அளுத்குறு கோறளே வடக்கு " அ " 157 ம் இலக்க கிராமசேவகர் பகுதியை குறண போலவலான இலக்கம் 157, குறன இலக்கம் 157 " அ " என இ பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதென இத்தால் சகலருடைய கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டுள்ளது.

(அ) கிராம சேவையாளர் இலக்கம் 157 க் கொண்டுள்ள குறண போலவான பின்வரும் கிராமங்களைக் கொண்டுள்ளது.

1. நீர்கொழும்பு மாநகர சபையின் வட்டார இல. 11.

(ஆ) கிராமசேவையாளர் இல. 157 " அ " க் கொண்டுள்ள கிராமசேவையாளர் பிரிவில் பின்வரும் கிராமங்கள் உள்ளடக்கியுள்ளன.

1. நீர்கொழும்பு மாநகரசபையில் உள்ள 12 ம் வட்டாரத்தை அடக்கியுள்ளது.
2. நீதிவான் கோடு, கிராமக்கோடு, பொலீசு நிலையம், பிறப்பு இறப்பு விவாகப் பிரிவு, தேர்தல் மாவட்டம், உள்ளூர் ஆ நிறுவனங்கள் ஆகியவை இப்புதிய கிராமசபை பிரிவுகளில் உள்ளது என்பதை பொது மக்கள் அறிவித்தலுக்காக கீ குறிக்கப்பட்டுள்ளது :—

| கிராமசேவகர் பிரிவு | நீதிவான்கோடு | கிராமக்கோடு | பிறப்பு இறப்பு விவாகப்பதிவுப்பிரிவு | உள்ளூர் நிறுவனம் | தேர்தல் பிரிவு |
|---|---|---|---|---|---|
| 1. 157 குறணபோலவலான .. | நீர்கொழும்பு .. | — .. | நீர்கொழும்பு .. | நீர்கொழும்பு மாநகரசபை .. | நீர்கொழும்பு |
| 2. 157 " அ " குறன .. | ஷை .. | — .. | ஷை .. | ஷை .. | ஷை |
| 3. பொலீசு நிலையம் .. | ஷை .. | — .. | ஷை .. | ஷை .. | ஷை |

டக்ளஸ் உமகிளிய,
அரசாங்க அதிபர்,
கொழும்பு மாவட்டம்.

அரசாங்க அதிபர் அலுவலகம்,
கொழும்பு,
1970 ம் ஆண்டு எப்பிரல் மீ 7 ந் உ.

4-621

---

## குருநாகல் மாவட்டத்திலுள்ள கிராம சேவகரின் பிரிவுகளைத் திருத்தியமைத்தல்

இத்தால் பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் :—

(அ) பிங்கிரிய காரியாதிகாரியின் பிரிவிலுள்ள 418 ம் இலக்க வீரகொடியான கிராமசேவகர் பிரிவு 418 ம் இலக்க வீரகொடியான 418 ஏ ம் இலக்க கொவுல்வெவ என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படும்.

(ஆ) இப்பாகமுவ காரியாதிகாரி பிரிவிலுள்ள 83 ம் இலக்க மாஎலிய கிராம சேவகர் பிரிவு 83 ம் இலக்க மாஎலிய, 83ஏ ம் இலக் பலகொல்ல என இருபிரிவுகளாகப் பிரிக்கப்படும்.

(இ) இப்பாகமுவ காரியாதிகாரி பிரிவிலுள்ள 98 ம் இலக்க ஹேனவ, 103 ம் இலக்க தித்தெனிய கிராமசேவகர் பிரிவுகள் 98 ம் இலக்க ஹேனவ, 103 ம் இலக்க தித்தெனிய 104 ம் இலக்க கிம்புல்வன என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படும்.

இப்பிரிவுகள் 1970 ம் ஆண்டு மே மாதம் 1 ந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருகின்றன.

2. (அ) (i) 418 ம் இலக்க வீரகொடியான கிராமசேவகர் பிரிவில் அடங்கும் கிராமங்கள் :—

இஹல வீரகொடியான
திகன்வெல
மாவீ கொட்டுவ
தொறபொ
பன்வத்தேகம
பஹலவீரகொடியான (421 ம் இலக்க வதுவத்த கி. சே. பிரிவிலிருந்து).

(ii) 418 ஏ ம் இலக்க கொவுல்வெவ கிராமசேவகர் பிரிவில் அடங்கும் கிராமங்கள் :—

கொவுல்வெவ
ஹெட்டியகொட்டுவ
கொறெக்கஸகாறே
மரக்கலமுல்ல
பஹல மண்டகொண்டான (424 ம் இலக்க கரந்தவில கி. சே. பிரிவிலிருந்து)

(ஆ) (i) 83 ம் இலக்க மாஎலிய கிராம சேவகர் பிரிவில் அடங்கும் கிராமங்கள் :—

அகாறெ
மாஎலிய
றம்பே

(ii) 83 ஏ ம் இலக்க பலகொல்ல கிராம சேவகர் பிரிவில் அடங்கும் கிராமங்கள் :—

பலகொல்ல
தகம
எகொடகம
உல்பத்வெவ
வீரகொல்ல

(இ) (i) 98 ம் இலக்க ஹேனவ கிராமசேவகர் பிரிவில் அடங்கும் கிராமங்கள் :—

ஹேனவ
நக்வத்தகம
தல்வெஹெர
உதுருவெல்ல
ஹம்பில்லகொல்ல
பஹல நெல்லியா

(ii) 103 ம் இலக்க தித்தெனிய கிராமசேவகர் பிரிவில் அடங்கும் கிராமங்கள் :—

பம்பரகல
திக்வெஹெர
தித்தெனிய
தேவகிரியா
ஹந்தவெல்பொல
முது கொமுவகம
நாபடவெவ
நிரம்முல்ல
பொல்கட்டுவா
சியம்பலங்கொமுவ

(iii) 104 ம் இலக்க சிம்புல்வன கிராமசேவகர் பிரிவில் அடங்கும் கிராமங்களும் குடியேற்றத் திட்டங்களும்.

இஹல நெல்லியா
கட்டுபொத
சிம்புல்வன ஓயா திட்டத்தின் 1 ம், 2 ம், 3 ம், யூனிட்டுகள்.

3. புதிய கிராம சேவகர் பிரிவுகளில் பரிபாலனம் செய்கிற நீதி மன்றங்களும், கிராமக் கோடுகளும், பொலிஸ் நிலையங்களும், பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவு காரர்களின் பிரிவுகளும் தேர்தல் மாவட்டங்களும், உள்ளூராட்சிச் சபைகளும் கீழே கொடுக்கப்பட்டவாறு அமையும்.

| கி. சே. பிரிவு | நீதிமன்றம் | கிராமக்கோடு | பொலிஸ் நிலையம் | பதிவுக்காரரின் பிரிவு | தேர்தல் மாவட்டம் | உள்ளூராட்சிச் சபை |
|---|---|---|---|---|---|---|
| 418. வீரகொடியான | குளியாப்பிட்டி | தும்மலசூரிய | தும்மலசூரிய | யகம்பத்து கோறளை | பிங்கிரிய | தும்மலசூரிய |
| 418ஏ. கொவுல்வெவ | ஷை | ஷை | ஷை | ஷை | ஷை | ஷை |
| 83. மாஎலிய | குருநாகல் | பொல்பிட்டிகம | கொக்கரல்ல | திவிகந்த ஹய கோறளை | ஹிரியால | பொல்பிட்டிகம |
| 83ஏ. பலகொல்ல | ஷை | ஷை | ஷை | ஷை | ஷை | ஷை |
| 98. ஹேனவ | ஷை | கந்துலாவ | ஷை | இஹலதொட கோறளை | ஷை | மடஹபொல |
| 103. தித்தெனிய | ஷை | ஷை | ஷை | ஷை | ஷை | ஷை |
| 104. சிம்புல்வன | ஷை | ஷை | ஷை | ஷை | ஷை | ஷை |

எச். பீ. திஸாநாயக,
அரசாங்க அதிபர்,
குருநாகல் மாவட்டம்.

குருநாகல் கச்சேரி,
1970 ம் ஆண்டு மார்ச் மீ 31 ந் உ.

4—640

---

## 1968 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க நீர்ப்பாய்ச்சற் (திருத்த) செய்சட்டத்தினல் திருத்தப்பட்டபடியான நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டம்

## (அதிகாரம் 453)

கமநலச்சேவை ஆணையாளர் செனவிரத்ன பண்டா சேனநாயக ஆகிய நான் 1968 ஆம் ஆண்டின் நிர்ப்பாய்ச்சல் (திருத்த) 48 ஆம் இலக்கச் செய்சட்டத்தினல் திருத்தப்பட்டபடியான நீர்ப்பாய்ச்சற் கட்டளைச் சட்டம் அதிகாரம் 453 இன் (இலங்கைச் சட்ட வாக்கங்கள்) படி கண்டி அரசாங்க அதிபரால் 1968 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க நீர்ப்பாய்ச்சற் திருத்தம்) செய்சட்டத்தின் 17 ஆம் பிரிவினல் திருத்தப்பட்டபடியான மேற்சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 33 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப் பட்டதும் கீழ்க்குறிக்கப்பட்டிருப்பதுமான திட்டம் என்னல் அங்கீகரிக்கப் பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

எஸ். பி. சேனநாயக,
கமநலச்சேவை ஆணையாளர்.

திகதி : 1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 18 ந் உ.

**சிறிய நீர்ப்பாய்ச்சல் வேலைகளைத் திருத்துவதற்கான திட்டம்**

1. வேலையின் பெயரும் விவரணமும் தும்பளை வெளிவிற்ற ஙனன்னே அணைக்கட்டு :

2. இத்திட்டத்தின் கீழ் நீர்ப்பாய்ச்சக் கூடிய காணியின் தன்மையும் அளவும்—தனியாருக்குச் சொந்தமான காணி : 15 அண்ணளவான ஏக்கர் அளவு : முடிக்குரிய காணி —

3. ஒப்புக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் :—

(1) கீழே தரப்பட மிக முக்கியமான கட்டட வேலைகளை அதாவது,

(i) அணைக்கட்டு கட்டுதல் ;

(ii) பாதுகாப்புச் சுவர்கள் கட்டுதல் ;

(iii) பிரதான மதவு ;

மதிப்பிடப்பட்ட செலவாகிய ரூபா 15,000/- வரைக்கும் அரசாங் கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(2) மேற்சொன்னவாறு அரசாங்கம் பொறுப்பேற்றமைக்குக் கைம்மா றாக காணித்துண்டு பெற்றவரும் குடிநில உரிமையுள்ள விவசாயி களும் அல்லது எக்காணியிலும் காணி பெற்றவரோ குடிநில உரிமையுள்ள விவசாயிகளோ இல்லாதவிடத்து அக்காணிகளில் சொந்தக்காரர்கள், இக் கட்டட வேலைகள் முடிந்ததன் பின் எதுவித வேதனமுமின்றி இவற்றைப் பேணுவதற்கும் திருத்து வதற்குமான கூலியாளர்களைக் கொடுத்துதவ வேண்டும்.

(3) இத்திட்டத்தின் கீழ் தங்கள் பங்கைச் செலுத்துவதில் காணித் துண்டு பெற்றவரோ குடிநில உரிமையுள்ள விவசாயியோ, இவர்களில்லாத விடத்துக் காணியின் சொந்தக்காரரோ தவறு வாராயின் இப்படியான வேலையை வேறு ஒருவரைச் செய்ய அரசாங்க அதிபர் பணித்து இதனல் ஏற்படும் செலவினை இக் கட்டளைச் சட்டத்தின் VII ஆம் பாகத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அறவிடலாம்.

4—689

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும் வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| எப்பிறல் | 3.4.70 | வெள்ளி | 25.3.70 | புதன் | பி. ப. 3.30 |
| | 10.4.70 | வெள்ளி | 3.4.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 17.4.70 | வெள்ளி | 8.4.70 | புதன் | பி. ப. 3.30 |
| | 24.4.70 | வெள்ளி | 17.4.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 30.4.70 | வியாழன் | 23.4.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| மே | 8.5.70 | வெள்ளி | 30.4.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 15.5.70 | வெள்ளி | 8.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 22.5.70 | வெள்ளி | 15.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 29.5.70 | வெள்ளி | 22.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| யூன் | 5.6.70 | வெள்ளி | 29.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 11.6.70 | வியாழன் | 5.6.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 18.6.70 | வியாழன் | 11.6.70 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 25.6.70 | வியாழன் | 18.6.70 | வியாழன் | ந. ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகன்.*

அரசாங்க அச்சகப் பகுதி, கொழும்பு,
1970 ஆம் ஆண்டு மாச்சு மீ 5 ஆந் உ.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.